# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. No. 112 /2018

## PW 8

| | | |
|---|---|---|
| Name | : | மரு. நரேந்தர் |
| Father's/Husband's Name | : | ராஜசேகர் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.04.2025.

**Accused 1, 2 present.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசியராக பணிபுரிகிறேன். கடந்த 30.05.2016 அன்று மதியம் 12.30 மணியளவில் சென்னை அரசு மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசியராக பணியில் இருந்தபோது கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய குற்ற எண். 170/2016 ல் தொடர்புடைய 40 வயது மதிக்கத்தக்க செல்வம் என்பவரது பிரேதத்தை பிணக்கூராய்பு செய்ய வேண்டிய காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தினை சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன் என்பவரிடம் பெற்றேன். மேலும் அவர் பிரேதத்தை 12.30 மணிக்கு அடையாளம் காண்பித்தார். பிரேத பரிசோதனையை 12.35 மணிக்கு ஆரம்பித்தேன். மரண விறைப்பு

உடல் முழுவதும் காணப்பட்டது . அவரை பரிசோதனை செய்த போது கீழ்க்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டது.

1) ஒழுங்கற்ற சிவப்பு கலந்த பழுப்பு நிறத்திலான சிராய்ப்பு காயங்கள்

a) 3x1 செமீ அளவில் இடது கன்னத்தில் காணப்பட்டது.

b) 1x0.5 செமீ அளவில் வலது கை முட்டியின் உட்புறம் காணப்பட்டது.

c)4x2 செமீ, 1x0.5 செமீ அளவில் வலது கால்முட்டியின் முன்புறம் காணப்பட்டது.

(d) 1x0.5 செமீ அளவில் வலது கால் முட்டியின் வெளிப்புறம் காணப்பட்டது.

(e) 3x1 செமீ அளவில் இடது முழங்காலின் முன்புறம் மேல் 3 ம் பகுதியில் காணப்பட்டது.

(f) 0.5 x 0.5 செமீ அளவில் இடது கை முட்டியின் பின்புறம் காணப்பட்டது.

2) கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 10 x 3 x தசை ஆழம் அளவில் வலது புஜத்தின் முன்புறம் நடு 3 ம் பகுதியில் காணப்பட்டது.

3) தையலிடப்பட்ட கிழிந்த காயம் 2 செமீ அளவில் இடது கன்னத்தில் காணப்பட்டது. தையலை பிரித்து பார்த்தபோது அக்காயம் 2x0.5x0.5 அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் சற்று ஒட்டியும் காணப்பட்டது.

4) தையலிடப்பட்ட கிழிந்த காயம் 1 செமீ அளவில் மேல் உதட்டின் வெளிப்பகுதியில் இடதுபுறம் காணப்பட்டது. தையலை பிரித்து பார்த்தபோது அக்காயம் 1x0.5x0.5 செமீ அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் சற்று ஒட்டியும் காணப்பட்டது.

5) கிழிந்த காயம் 2 x0.5x0.5 செமீ அளவில் மேல் உதட்டின் உட்புறம் இடதுபுறமாக காணப்பட்டது.

6) கிழிந்த காயம் 1x0.5x0.5 செமீ அளவில் கீழ் உதட்டின் உட்புறம் இடதுபுறமாக காணப்பட்டது.

7) தையலிடப்பட்ட கிழிந்த காயம் 1.5 செமீ அளவில் முகவாயின் இடதுபுறம் காணப்பட்டது. தையலை பிரித்து பார்த்தபோது அக்காயம் 1.5x0.5x0.5 செமீ அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் சற்று ஒட்டியும் காணப்பட்டது . மேலும் கூராய்வு செய்ததில் ஒழுங்கற்ற முழுமையான எலும்பு முறிவு கீழ்தாடை எலும்பில் இடதுபுறம் காணப்பட்டது. அதனை சுற்றி இரத்தக்கசிவும் கன்றிய காயமும் காணப்பட்டது.

8)கிழிந்த காயம் 4x0.5x0.5 செமீ அளவில் இடது காது மடலின் வெளிப்புறம் காணப்பட்டது.

9) கிழிந்த காயம் 3 x 0.5 x 0.5 செமீ அளவில் இடது பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதியில் காணப்பட்டது.

10)கிழிந்த காயம் 4 x0.5 x தோல் ஆழம் அளவில் இடது பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதியில் காணப்பட்டது . மண்டை ஓட்டு தோல் பகுதியை பிரித்து பார்த்தபோது கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 15 x 10 செமீ தோல் ஆழம் அளவில் வலது பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல்பகுதியில் காணப்பட்டது . கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 10 x 10 செமீ தோல் ஆழம் அளவில் இடது பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல்பகுதியில் காணப்பட்டது . இடதுபுற பக்கவாட்டு மண்டை ஓட்டு தசைப்பகுதியில் கன்றிய காயம் காணப்பட்டது. நேரான எலும்பு முறிவு 7 செமீ அளவில் இடது பக்கவாட்டு மண்டை ஓட்டில் காணப்பட்டது . மண்டை ஓட்டை பிரித்து பார்த்தபோது மூளையின் மேல் உள்ள சவ்வு நல்ல நிலையில் காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்திலான இரத்தக்கசிவு பெரு மூளையின் இருபுறமும் சவ்வுக்கு மேலும் கீழும் காணப்பட்டது . மூளை வீங்கி காணப்பட்டது . கூராய்வு செய்ததில் இரத்தக்கசிவு 1x1x0.5 செமீ அளவில் இடதுபுற சிறுமூளையில் காணப்பட்டது. நேரான எலும்பு முறிவு 5 செமீ அளவில் மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் வலதுபுறம் முன் 3 ம் பகுதியில் காணப்பட்டது. நேரான எலும்பு முறிவு 15 செமீ அளவில் மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் வலதுபுறம் இருந்து இடது புறம் வரை நடு 3 ம் பகுதியில் காணப்பட்டது.

இதயம் சாதாரண நிலையில் காணப்பட்டது . கூராய்வு செய்ததில் அனைத்து அறைகளும் இரத்தம் திரவமாகவும் கட்டியாகவும் காணப்பட்டது . வால்வுகள், இதயத்திற்கு செல்லும் இரத்தக்குழாய்கள் மற்றும் பெருந்தமனிகள் நல்ல நிலையில் காணப்பட்டது. நுரையீரல்கள் சாதாரண அளவில் காணப்பட்டது. கூராய்வு செய்ததில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது . மூச்சுக்குழாய், குரல்வலை மற்றும் நாவடி எலும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள திசுக்கள் நல்ல நிலையில் காணப்பட்டது . இரைப்பை காலியாகவும் எவ்வித வாசனையும் இல்லாமல் காணப்பட்டது . கூராய்வு செய்ததில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது . கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரண நிலையில் காணப்பட்டது . கூராய்வு செய்ததில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது.சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது . மார்பெலும்புகள், இடுப்பெலும்புகள் மற்றும் முதுகெலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது . உடல் உறுப்புகள் இராசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது . வேலூர் வட்டார தடய

அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட நஞ்சியல் அறிக்கையில் உள் உறுப்புகளில் மது கண்டறியப்பட்டது . ஆனால் நச்சு தன்மை வாய்ந்த பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. **அந்த அறிக்கை அ.சா.ஆ.9**. மேற்படி நபர் தலையில் ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.சா.ஆ.10.** இது சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் . மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு 12-24 மணி நேரங்களுக்கு முன் இறந்திருக்க வாய்ப்புண்டு . ஒரு நபரை கருங்கல் மற்றும் மரக்கொம்பால் தாக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

இறந்த நபருக்கு வலது கன்னத்தில் காயம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். தலையின் பின்புறம் கத்தியால் வெட்டியதாகவோ அல்லது கல்லால் குத்தப்பட்ட எந்த வெளிப்புற காயமும் இல்லை. தலையில் வலது மற்றும் இடது பக்கவாட்டில் ஏற்பட்ட காயங்களினால் மூளையின் உட்புற பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட வாய்ப்புண்டு. தலையின் பின்பகுதியின் உள்ளே எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. மேற்படி நபரின் மருத்துவ குறிப்புகளை நான் பார்வையிடவில்லை என்றால் விபத்து பதிவேட்டு நகலை பார்த்தேன் . விபத்து பதிவேட்டு நகலில் இடது பக்கவாட்டு மண்டையில் கிழிந்த காயம் , இடது காதிற்கு மேல் ஒரு கிழிந்த காயம் மற்றும் வலது கன்னத்தில் ஒரு வீக்கக்காயம் ஆகியவை மட்டும் இருந்ததாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை சான்றில் சொல்லியுள்ள காயம் 1 ல் a முதல் f வரை உள்ள காயங்களும், 2 முதல் 10 வரை உள்ள அனைத்து காயங்களும் சிகிச்சையில் அனுமதிக்கும்போது பார்த்தால் தெரியக்கூடிய காயங்கள் என்றால் சரிதான் . உடல் உள் உறுப்புகளில் மது காணப்பட்ட காரணத்தினால் மேற்படி நபர் மது போதையில் சைக்கிள் அல்லது இருசக்கர வாகனத்தில் சென்று சாலையில் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் அனைத்து காயங்களும் ஏற்பட வாய்ப்பில்லை . ஒரு நபரை தடியால் ஒரேயொரு முறை வலது கன்னத்தில் அடிக்கும்போதும் , தலைக்கு பின்னால் கருங்கல்லால் ஒரு அடி அடிக்கும்போதும் நான் பிரேத பரிசோதனை சான்றில் குறிப்பிட்டுள்ள அனைத்து காயங்களும் ஏற்பட வாய்ப்பில்லை என்றால்

சரிதான். என்னை விசாரணை அதிகாரி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தபோது ஆயுதம் காண்பித்தாரா என்றால் எனக்கு அதைப்பற்றி ஞாபகம் இல்லை. கிராமங்களில் தண்ணீர் பிடிப்பதற்காக சீரற்ற முறையில் கட்டப்பட்ட குழாய் பள்ளத்தில் ஒரு நபர் விழுந்தால் நான் குறிப்பிட்ட மண்டையின் இரண்டு பக்கத்திலும் ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை . ஆனால் எந்த பக்கத்தில் விழுகிறாரோ அந்த பக்கத்தில் மட்டும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒரு பக்கத்தில் மோதி காயம் ஏற்பட்ட பின்னர் மற்றொரு பகுதியில் மோதி மற்றொரு பக்கத்தில் காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் மோதும் இடத்தில் மட்டும் ஏற்பட வாய்ப்புண்டு.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.